# இல்லம் சிறந்திட வாழ்க




ஆக்கம்:

**மூ.சிவலிங்கம்**

இணுவில்.



இறையருள் ஆசியுடன் நல்லறம் பேணும்

திரு. திருமதி

சரவணபவன் சுகந்தினி தம்பதியினரின்

திருநிறைசெல்வி **சுரபி** அவர்கள்



மண்ணிற் பிறந்து, அசைந்து, ஊர்ந்து, தவழ்ந்து, எழுந்து ஓராண்டில் எட்டி ஓரடிவைத்து இன்று (20.05.2007) தனது இரண்டாவது அடியில் காலடியைப் பதிக்கிறாள்.

இத்தெய்வீக நிகழ்வில் இன்புறுவோர் படித்து மகிழ வழங்கும் கையேடு



# "இல்லம் சிறந்திட வாழ்க"

ஆக்கம்:

**மூ.சிவலிங்கம்**

இணுவில்.

**அருள்மிகு அன்னை சிவகாமி அரவணைக்க**

# திரு. திருமதி சரவணபவன் சுகந்தினி

**அவர்களின்**

**செல்வப்புதல்வி சுரபியின் முதலாவது ஆண்டு**

**பிறந்தநாள்**

# இனிய நாளாக மலரட்டும்

1. அன்னைசிவ காமியருளில் அவதரித்த சுரபி
ஆரணியே முதலுதித்தாய் அன்புடையாய் வாவா
பொன்னே இரத்தினமே பூமகளே வாவா
பொலிய எங்கள் மரபுயரப் பொற்கொடியே வாவா.

2. கண்ணே மழலை பேசுங்கிளியே கனிந்து பேசி வாவா
கானக் குயில் போலினிக்க களித்துப்பாடி வாவா
வண்ணத் தோகை மயில்போல் சுற்றி நடன மாடி வாவா
வைய கத்தில் கற்பகமாய் வாழ்ந்து வளர்ந்து வாவா

3. ஆண்டு ஒன்று சுரபிபிறந்த அரியநன் நாளில்
அழகின் பட்டுச் சட்டையோடு பொட்டுமணிந்தே
வேண்டும்பல காரஞ்செய்து சுரபிக் கூட்டியே
விரும்பிப் பல் லாண்டு வாழ மேலும் வாழ்த்தினோம்

4. சிவசரவணபவனே உன்தன் தந்தை யாகவும் வாழ்த்தினோம்
தேவி நல்ல சுகந்தி னியே தாயாகவும்
நவசக்தி நாயகியருள் பெற்றெந் நாளுமே ஒன்றாய்
நம் இணுவைநல்லூர் வாழ நயப்புடன் வாழ்க வாழ்க.

**இணுவில் வை.க.சிற்றம்பலம்**

முதுபெரும்புலவர், கலாபூஷணம்,

ஆசிரியர்.



**இணுவில் உரும்பிராய் வதியும்**

**சரவணபவன் சுகந்தினி தம்பதியினரின்**

**செல்வப்புதல்வி சுரபியின் இன்றைய பிறந்ததின**

**மகிழ்வில் ஆசிகூறியும், ஒரு சில சிறப்புத்**

**தகவல்களையும்**

**தருவதில் ஆனந்தமடைகின்றேன்**

குழந்தைகளைச் சிறுபராயத்திலிருந்தே சீரிய பண்போடு வளர்த்தெடுப்பது பெற்றோரின் கடமையாகும். நாம் சொல்லிக் கொடுப்பதையே கிளிப்பிள்ளை போல பிள்ளைகள் கதைக்கப் பழகுகையில் அதையே திருப்பிச் சொல்வார்கள். நாம் காலையில் வழிபாடு செய்யும்போது "அப்புசாமி கும்பிடு" என்று சொல்லிக் கொடுக்கிறோம். அவர்களும் கண்ணை மூடிக்கொண்டு கைகூப்பி தாய் தந்தையர் சொல்வதைப் போல் தாமும் செய்வதைப் பார்க் கின்றோம். சிறு பராயத்தில் குழந்தைகள் பழகும் பழக்கவழங்கங்களே அவர்கள் வளரவளர அவர்களை ஆட்கொண்டுவிடுகின்றன. இது நாம் அறியும் அனுபவமாகும்.

வீட்டுக்கு வரும் விருந்தினர்களை வணக்கம் கூறும்படி குழந்தைக்குக் கூறுவோம். அவர்களும் வணக்கம் கூறுவார்கள். காலையில் பெற்ற தாயின் கால்களைத் தொட்டுக் கும்பிடுமாறு பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். குறிப்பாகப் பிள்ளைகள் ஆரம்பப் பாடசாலைக்குச் செல்ல ஆரம்பித்ததும் தாயின் காலைத் தொட்டு வணங்கிச் செல்ல பழக்கப்படுவார்களாயின் அந்த நடைமுறை வாழ்நாள் முழுவதும் நீடித்து நிலைக்கக் காணலாம். "தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை" என்ற மனோநிலை அவர்களிடம் பதிய வேண்டும். பாடசாலைக்குச் செல்லும் குழந்தை முதலில் குருவான ஆசிரியருக்கு வணக்கஞ் செலுத்தக் கற்றுக் கொடுக்க வேண்டும். மாதா, பிதா, குருவைத் தெய்வமாக மதிக்க வளர்க்கப்படும் சிறார்களிடத்து அனைத்து நற்பண்புகளும் குடிகொண்டுவிடும். குழந்தைகளைப் பயமற்றவர்களாக வளர்த் தெடுப்பதும் முக்கியமானது. பிள்ளைகளிடத்துப் பொய் என்ற வார்த்தைகளைப் பெற்றோர் பாவித்தலைத் தவிர்க்க வேண்டும்.

பொய்பேசக் கூடாது என்பதைவிட, எந்நேரமும் உண்மை யையே பேசவேண்டும் என்ற கோட்பாட்டை வலியுறுத்த வேண்டும். இதனால் அவர்கள் உளரீதியாக என்றுமே உண்மை பேசக் கற்றுக் கொள்ளுவார்கள். பிள்ளைகள் தமது எந்த வேலையையும் தாமாகவே செய்து பழகச் சொல்லிக் கொடுக்க வேண்டும். அவர்கள் தன்னம் பிக்கையுடன் எதிர்கொண்டு வெற்றிநடை போட முன்வருவார்கள்.

பிள்ளைகள் எப்படியும் வளர்ந்தால் போதுமென்ற சிந்தனையை விட இப்படித்தான் வளரவேண்டும் என்ற கோட்பாட்டைப் பெற்றோர் மிகமிக அவசியம் பேணவேண்டும். நன்றும் தீதும் பிறர்தரவரா என்பது ஆன்றோர் வாக்கு.

"எல்லோரும் சிறப்புடன் வாழ வேண்டும்"

**செல்லப்பா நடராசா**

சமதான நீதவான்,

மூத்த பத்திரிகை எழுத்தாளர்.

உ



**பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை**
**நாலும் கலந்துனங்கு நான்தருவேன் - கோலஞ்செய்**
**துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்**
**சங்கத் தமிழ்மூன்றும் தா.**

**தனந்தரும் கல்விதரும்ஒரு நாளும் தளர்வறியா**
**மனந்தரும் தெய்வ வடிவுந்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா**
**இனந்தரும் நல்லன எல்லாம்தரும் அன்பர் என்பவர்க்கே**
**கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.**

**அறநெறி தழைக்க ஆலயஞ்சென்று**
**இல்லம் சிறந்திட ஈசனை வேண்டிடுவோம்**
**உழுதூண் சுவையாம் ஊட்டச்சத்தினை ஏற்றிடுவோம்**
**எண்ணும் எழுத்தும் ஏழிசையும் கற்கவும்**
**ஐந்து வயததனில்**
**ஒளிமிகு கல்வியை ஓதி உணரவும்**
**ஔவை அருளிய நல்வழி நாடிடுவோம்**
**அஃதே மக்கட் பண்பாகும்.**



# நல்லதொரு குடும்பம்

தாரமும் குருவும் அமைவது அவரவர் முன்செய்த வினைப் பயனாலேயாகும்.

இல்லறம் நல்லறமாக மலரவேண்டுமாயின் தம்பதியர் தம்மைத் தாமே நன்குணர்ந்து இருவர் கருத்தும் ஒன்றாகவும், ஒருவர் சிந்தனையை அடுத்தவர் ஏற்றும் செயற்படின் யாவும் சிறப்படையும். தமது குடும்ப எதிர்கால நன்மை கருதி இருவரும் அமைதியுடனும், தூய பக்தியுடனும் தத்தமது கடமைகளை நற்சிந்தனையுடன் சிந்தித்துச் செயலாற்றுமிடத்து இல்லறம் பிரகாசமடைகிறது.

ஒரு குடும்பம் மேலும் சிறப்படைய வேண்டின், நம்முன்னோர் கையாண்ட நெறிகளில் சிலவற்றையாவது பின்பற்ற வேண்டும். நடைமுறையில் பேணிவந்தால் அதன் பயனை நன்கு உணரலாம். நமது புத்திரச் செல்வங்களை நன்கு பராமரித்து நோய், நொடிகள் வராமல் பாதுகாக்க வேண்டும். ஏதாவது சிறு சிறு நோய்களக்கு பாட்டி வைத்தியம் / கைவத்தியம் கைகொடுக்கும். குறைந்த செலவும் சிறந்த பலனும் அடையலாம். சிறார்களுக்கு வயதுப் பருவங்களுக் கேற்ற சத்தான நிறையுணவை அளவோடு ஊட்டவேண்டும். சிறுவர் விரும்பாதபோது சிறிதளவேனும் திணிக்கக்கூடாது.

உரிய வயதில் ஏட்டுக்கல்வியும், தொடர்ந்து நல்லாசிரியர் மூலம் கல்விக்கூட அறிவும் தேடிக்கொடுக்க வேண்டும். மேலும் தாம் சார்ந்த சமயக்கல்வியையும், நற்பழக்கவழக்கங்களையும் ஊட்டுவதால் இப்பிள்ளையிடம் நற்பண்பு குடிகொள்ளும். ஒரு பிள்ளையை ஐந்து வயது மட்டும் ஆதரவாகப் பேணவேண்டும். தொடர்ந்து பதினாறு வயது வரை மிகக் கவனத்துடனும், கண்டிப்புடனும் அணுகி அவரவர் வேலைகளைத் தாமே உணர்ந்து செயற்பட வைக்கவேண்டும். பதினாறு வயதுக்கு மேல் நண்பர்களாக மதித்து அவர்களுக்கு வேண்டிய உணவு, உடை, கல்விக்கான சகல வசதிகளும் தேவைக்களவாக வழங்கி அவர்களைத் திருப்திப் படுத்த வேண்டும்.

இப்படியான சூழலில் பேணப்படும் பிள்ளை தன்னளவில் அதிக கவனஞ் செலுத்தி கல்வி பயிலும், நற்பழக்கவழக்கங்களிலும், இதர செயற்திறன்களிலும் மேலோங்கி முதன்மையாக வரும்போது யாவரும் பெருமையுடன் அப்பிள்ளையின் சிறப்பைப் பாராட்டுமிடத்து பெற்றோர் பெருமிதப்படுவர். சிறப்பாக பெற்றவளே அகம் மகிழ்வாள். ஆனால் பிள்ளைகளின் கல்வியில், நடைமுறையில், பண்பில் சற்று மாறினால் அவமதிக்கப்படுவதும் பெற்றோர்களே.

ஒரு இல்லம் சிறப்படைய வேண்டின் கணவன், மனைவி இருவரும் சலிப்பின்றித் தம்மையே அர்ப்பணித்துத் தமது கடமை களைச் செய்யவேண்டும். கணவனும் பூரண விருப்பத்துடன் எக் காரியத்தையும் செய்யுமிடத்து யாவும் நிறைவாகும்.

நம்முன்னோர் அக்காலத்தில் விவசாயத் தொழிலையே மேற்கொண்டனர். இல்லம் சிறந்திட வாழ எண்ணினர். விடா முயற்சியுடன் கடின உழைப்பும், சிக்கன வாழ்வும், நிறைவான சத்துணவையும் மேற்கொண்டனர். இவர்களின் சிக்கன வாழ்வுடன் பகுத்துண்டு பல்லுயிரோம்பி வந்தனர். தமது மெய்வருந்திக் கருமமாற்றிப் பொருள் தேடினர். பிறர் பொருளை நாடவில்லை. இதனால் இவர்களிடம் நற்பண்பு உதயமானது. அகமும் புறமும் நிறைவாக நோய் நொடியின்றி நூறாண்டு காலம் வாழ்வாங்கு வாழ்ந்து ஆயிரம் பிறை கண்டு இன்புற்றனர்.

இவர்களது சிக்கன வாழ்வில் தமது வீட்டிலும், விவசாயப் பூமியிலும் கிடைக்கும் பதார்த்தங்களே சத்துணவானது. விளை நிலத்தில் விளைந்த தானிய வகைகள், கிழங்கு வகைகள், காய்கறி வகைகள் தாராளமாகக் கிடைத்தன. இரசாயன உரவகையோ, கிருமி நாசினிகளோ பயன்படுத்தப்படவில்லை. தோட்டத்தில் மாட்டெருவைப் பசளையாக்கினர். இதனால் கிருமிகள் அழிந்தன. பயிருக்கு நோய்கள் வருவதில்லை. சத்தான உணவாகின. பனந்தோப்புகளிலுள்ள பனம் பொருட்கள் யாவும் பயன்பட்டன. பனையின் உணவுப் பண்டங்கள் வீட்டில் நிறைந்திருக்கும். வீட்டில் குறைந்தது ஒரு பசுமாடு எந்த நேரமும் பால்தரும் நிலையில் இருந்தன. வீட்டைச் சுற்றியுள்ள வெற்றுநிலத்தில் தென்னை, இலைக்கறிக்குதவும் கொடி, செடிகள்,



காய்கறிப் பயிர்கள், கறிமுருங்கை போன்றவை வளர்ந்தன. நாளாந்த தேவைக்கான காற்கறி பழவகைகளும், பாவனைக்குரிய தேங்காய் யாவும் தாராளமாகக் கிடைத்தன. இவர்கள் தமது மண்வாசனைக்கேற்ப நீராகாரத்தையும், கூழ், கஞ்சி போன்றவற்றையும் உபஉணவாக ஏற்றுத் திடகாத்திரமாக வாழ்ந்தனர்.

மேற்கூறிய முன்னோரின் காலத்திலுள்ள செயல்களில் காலப் போக்கில் மாற்றமேற்பட்டுள்ளன. குடிகள் பெருக்கமடையவும் பனம் தோப்புக்கள், தரிசுநிலங்கள், விளைநிலங்கள் பெரும்பாலும் குடி மனைகளாகின. கல்வியில் முன்னேறிப் பற்பல வேலைகளை நாடினர். கடின உழைப்பு அருகவும் பொருளீட்டலில் குறுகிய வழிகளை நாடவும் உலகளாவிய சீவிய மாற்றம் தலைதூக்கியதால் உணவிலும் மாற்றம் ஏற்பட்டது. முற்றிலும் மாறுபாடில்லாதவாறு இன்றைய நடைமுறைக்கேற்ப ஒரு சிலவற்றைத்தானும் கையாளலாமே.

குடியிருப்புக் காணியில் வீட்டுத்தோட்டம் அமைத்து பயனுள்ள காய்கறிவகை, கறிமுருங்கை, இலைக்கறிக்கான கொடி, செடிகள், வீட்டுக்கொரு பசுவும் வளர்த்தால் அன்றாட தேவைக்கான காய்கறி வகை, பசுப்பால் போன்ற பல சத்தான நிறை உணவுக்கான பொருட்களைப் பெறலாம். நோய்த்தாக்கம் வெகுவாகக் குறையும்; சிக்கனமாக வாழலாம்.

நம்முன்னோர் தெய்வநம்பிக்கையும், எவரிடமும் அன்பும் ஆதரவும் நல்கி இன்புற்றனர். தெய்வ பக்தியினால் கோயில் திருப்பணிக்கு உதவுதல், ஏழைகள், பசித்து வந்தவர்களுக்கு உதவுதல் போன்ற செயல்களிலும் நாடினர். இல்லத்தரசிகளும் தமது கணவன்மாரின் குறிப்பறிந்து நாளாந்தம் உலையிலிடும் அரிசியில் ஒரு கைப்பிடி அரிசியை இறைவனை நினைந்து எதிர்காலத் தருமச்செயல்களுக்காக வேறாகப் போட்டு வைத்தனர். கோயில் திருப்பணிக்கென அரிசி சேகரிப்போர், மற்றும் தருமம் கோருபவர்கள் வந்தால் மனமுவந்து கொடுத்து வந்தனர். இதனால் பல ஏதிலிகள் பயனடைந்தனர். பல கோயில்களில் பூசை, அன்னதானம் போன்றவை சிறப்படைந்தன.

இணுவில் சிவகாமி அம்மன் கோயிலின் கருவறை முதல் மணிமண்டபம் வரை சாத்திரம்மா என்ற மூதாட்டி தொடர்ந்து 40 வருடங்கள் இல்லங்கள் தோறும் பிடி அரிசி எடுத்தே திருப்பணியை நிறைவேற்றினார். மதுரை மீனாட்சியம்மன் கோயில் திருப்பணி 125 வருடங்களுக்கு மேல் பகுதி பகுதியாக நிறைவேற்றப்பட்டது. இதில் பொதுமக்கள் பிடி அரிசி எடுத்துச் சேர்த்த நிதியில் ஒரு மண்டபம் கட்டுவித்தனர். இவை யாவும் வரலாறு கண்ட உண்மையாகும். பிடியரிசி சேமிக்கும் முறை இன்றைய காலச் சூழலுக்கு ஏற்காவிடினும் இதனால் சிக்கனமும், தருமமும் உண்டாகிறது. நலிவுற்றோரை நேசிக்கும் பண்பும் மலருகிறது. ஏழைகளின் மன நிறைவில் எமது இல்லம் சிறப்படைகிறது.

❋ ❋ ❋

**குளியல், எண்ணெய் முழுக்கு**

- ஆண்கள் புதன்கிழமைகளில் எண்ணெய் தேய்த்துக் குளிக்கலாம்.
- பெண்கள் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் எண்ணெய் தேய்த்துக் குளிக்கலாம்.
- அமாவாசை, பௌர்ணமி, மாதப்பிறப்பு, ஜென்ம நட்சத்திரம் ஆகிய தினங்களில் எவரும் எண்ணய் தேய்த்துக் குளிக்கக்கூடாது.
- தலையில் தேய்த்த எண்ணெயை வழித்து உடம்பின் பிறபகுதிகளில் தேய்க்கக்கூடாது.
- ஞாயிற்றுக்கிழமைகளில் எண்ணெய் தேய்த்துக் குளிக்கவே கூடாது.
- உறவினர்களை ஊருக்கு வெளியே அனுப்பிவிட்டு எண்ணெய் தேய்த்துக் குளிக்கக்கூடாது.
- விடியற் காலையிலும் மாலையிலும், பிறந்தநாள், திருமணநாள், உபாசநாள் ஆகிய வேளைகளிலும் எண்ணெய்க் குளியல் செய்யக் கூடாது.
- தீபாவளியன்று மட்டும் விடியற்காலையில் எண்ணெய் தேய்த்து வெந்நீரில் துளசி இலை போட்டுக் குளிப்பது சகல புண்ணிய தீர்த்தங்களிலும் நீராடிய பலனைக் கொடுக்கும்.
- ஔவையின் கூற்றுப்படி "சனிநீராடு" யாவருக்கும் பொருந்தும்.



# தெய்வீகப்பசு

ஈசன் கயிலையில் இடபதேவரின் அருகேயுள்ள கபில நிறமுடைய நந்தை, கரிய நிறமுடைய பத்திரை, புகைவண்ணமுள்ள சுசீலை, வெண்ணிறம் கொண்ட சுரபி, செந்நிறமான சுமனை என்னும் ஐந்து பசுக்களைப் பூவுலகிற்கு முதன்முதல் அனுப்பிவைத்தார். இவைகளிலிருந்தே பூலோகத்தில் பசுக்கள் விருத்தியடைந்தன. அதனை நினைவூட்டும் வகையில் பசுவிடமிருந்து பெறப்படும் பால், தயிர், நெய், கோசலம், கோமயம் என்னும் ஐந்து பொருட்களும் பஞ்சகவ்வியம் என்ற புனிதப் பெயராகக் கருதப்படுகிறது.

பசுவில் சகல தேவர்களும் குடிகொண்டுள்ளனர். இதனால் பசு சாந்தமாகவும், புனிதமாகவும், சிறப்பாகவும் காணப்படுகிறது. பொருளாதார ரீதியில் பசுவின் பால், தயிர், நெய் யாவும் நிறைவான மலிவான சத்துணவாகும். பசுவின் சாணம் வீட்டுமுற்றம், சுற்றுச் சூழலைத் தூய்மையாக்கும் கிருமிநாசினியாகப் பயன்படுகிறது. மேலும் விவசாயப் பூமியில் பயிர்களுக்குப் பசளையாகவும் பயன் படுகிறது.

பசுவுக்கு அகத்திக்கீரை, புல் கொடுத்து வணங்கி வலம் வந்தால் புத்திசாலிகளான சற்புத்திரர்கள் பிறப்பார்கள். மேலும் எமது பாவங்களும் நீங்கும்.

சித்தப்பிரமை, தோல், எலும்பு சம்பந்தமான நோய்கள் பஞ்ச கவ்வியம் உட்கொண்டால் நீங்கும் என்று சித்தவைத்தியம் தீர்க்கமாகக் கூறுகிறது.

பசுவில் தேவர்கள் பலர் குடியிருந்து மகாலட்சுமியின் உருவமானதால் பசு வளரும் வீட்டின் காவல் தேவதையாகவும் அமைகிறது. மேலும் மகாலட்சுமியான பசுவை வீட்டில் வளர்த்தால் திருமகளின் அருளால் நிறைசெல்வம் தங்கி நிற்கும். நோய்கள் அணுகாது. வளமான உயர்ந்த வாழ்வும் மலர இல்லம் சிறக்கிறது.

❋ ❋ ❋

உண்ணும்போது கிழக்கு நோக்கி அமர்ந்து உணவு உண்டால் ஆயுள் வளரும். மேற்கு நோக்கி அமர்ந்து உண்டால் புகழ்சேரும். வடக்கு நோக்கியபடி உட்கார்ந்து சாப்பிட்டால் நோய் வளரும்.

# மூலிகைகள்

இறைவனால் படைக்கப்பட்டுச் சித்தர்களால் கையாளப்பட்டு அநேக நன்மைகளுக்கு மையமான ஆயுள்வேதம் மூலிகைகளில்தான் தங்கியுள்ளது. இவற்றுள் பல எமது கைவைத்திய தேவைக்கும், தெய்வீக சக்திக்குமாக வீடுகளில் வளர்த்தால் நன்மைகள் பலவற்றை அடையலாம். அவற்றுள் சிலவற்றை நோக்குவோம்.

## துளசி

துளசிச்செடி மூன்று அடி உயரம் வரை வளரக்கூடியது. திருமாலுக்கும் துளசிக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருப்பதால் துளசி திருமாலின் மார்பில் இடம்பெறுகிறது. இது ஒரு தெய்வீகமான மூலிகையும், மணமூட்டும் தாவரமுமாகும். துளசி ஆரோக்கியத்தையும், ஐஸ்வரியத்தையும் தரவல்லது. இது தன் சிறப்பால் இடிதாங்கியாகவும் விளங்குகிறது. துளசி வளரும் வீட்டில் பில்லி, சூனியம், கெட்டதேவதைகள் அணுகாது. துளசிவேரைக் கையில் கட்டிக்கொண்டால் இடியின் பயம் ஏற்படாது. வீட்டுவாசலில் மஞ்சளில் நனைத்த துளசிவேரைக் கட்டிவைத்தால் இடி யாரையும் தாக்காது. துளசிச் செடியில் புரதம், மாவு, கொழுப்பு, தைலம் உபயோகச் சத்துக்கள், சீவசத்துக்கள், நார், உப்புவகை போன்ற பல தன்மையான சத்துக்களும் அடங்கியுள்ளன. துளசியின் சிறப்புக்கும், மணத்துக்கும் இதில் அடங்கியுள்ள வேதைப் பொருட்களே காரணமாகும்.

துளசியின் இனிய காற்று மனதைக் கவரக்கூடியது. இதில் அதிகளவு பிராணவாயு வெளிவருகின்றது. அதிகளவு மின்கதிர்களையும் வெளிவிடுகிறது. துளசியிலிருந்து சுகந்த தைலங்கள், மருந்து வகைகள் தயாரிப்பதற்கான கவர்ச்சியான பொருட்கள் கிடைக்கின்றன.

மேற்கூறிய தெய்வீகமான துளசிச்செடியை இல்லங்கள் தோறும் நல்ல புனிதமான தளம் அமைத்து நன்மையடையலாம். காலை, மாலை ஆசாரத்துடன் துளசியை வலம் வந்து வணங்கும் பெண் கணவனின் ஆயுள்பலம், புத்திரர்களின் சிறப்பு, குடும்ப ஒற்றுமை யாவற்றையும் பேணுகின்றாள். மாலையில் துளசித் தளத்திற்கு தீபம் ஏற்றுவதால் திருமகள் வீட்டில் குடியேறுகிறாள்.



### துளசியின் மருந்துவப் பயன்கள்

- தினமும் காலையில் ஓரிரு துளசி இலையை மென்றால் ஞாபகசக்தி கூடும்.
- குழந்தைகள் பால் குடிக்காமல் வாந்தி எடுத்தால் ஐந்து துளசியிலைச் சாற்றுடன் தேன்கலந்து கொடுத்தால் வாந்தி நிற்கும்; குழந்தை பால்குடிக்கும்.
- ஒரு கைப்பிடி துளசி இலைகளோடு எலுமிச்சைப்பழச்சாறு சேர்த்து அரைத்துத் தேமல், படர்தாமரை ஆகிய தோல் வியாதிகளின் மேல் பற்று மாதிரிப் பூசிவந்தால் குணமாகும்.
- துளசி இலையை அரைத்துப் புண்ணின் மேல் வைத்துக் கட்டப் புண் ஆறும்.
- காய்ச்சல் நோய் காலத்தில் அதிக தாகம் இருக்கும்போது ஒரு கோப்பை நீரில் இரு கரண்டி துளசிச்சாறு கலந்து குடித்தால் தாகம் போகும்.
- தேள் கொட்டிவிட்டால் துளசி இலைச்சாற்றைத் தடவி சிறிதளவு துளைசி இலைச்சாற்றைக் குடித்தால் விஷம் இறங்கும்.
- தினசரி ஒரு துளசி இலையுடன் மூன்று மிளகை வாயிலிட்டு விழுங்கி சிறிதளவு வெந்நீர் குடித்தால் தேகம் சுத்தமாகும், நோய் எதிர்ப்புகள் கூடும்.
- துளசி இலைச்சாற்றுடன் சிறிதளவு சர்க்கரை சேர்த்துக் காலையில் ஒரு கரண்டி வீதம் ஏழு நாட்கள் பருகினால் பித்தமயக்கம், தலைச்சுற்றல் நீங்கும்.

## வேம்பு

வேம்பு இயற்கையாகவே ஒரு தெய்வீக மரமாகும். சக்தியின் மிகப் பிரியமான வேப்பிலை மிகச் சிறப்பான தெய்வீக குணமுடையது. அம்மன் கோயில்களைச் சூழ உள்ள இடங்களில் இப்புனித மரங்கள் ஓங்கி வளர்ந்துள்ளன. வேம்பின் இலை, பூ, காய், விதை, விதையிலிருந்து பெறும் எண்ணெய், மரப்பட்டை, வேர் போன்ற அத்தனையும் மருத்துவ குணமுடையன. வேப்பம் பூவிலிருந்து வடகம் செய்து சாப்பிட்டால் குடல் நோய்கள் அகலும். சிறந்த கிருமி நாசினியாகவும் உபயோகமாகிறது. சிறந்த மணமும் வேப்பமரத்தின் அரிய நிழலும், வேம்பு தழுவிய காற்றும் மிகவும் இதமானது. தீராத

கொடிய காய்ச்சல் கண்டவர்கள் வீணே அலையாமல் மூன்று நாட்கள் தினம் மூன்று வேளையும் முதிய வேம்பின் பட்டடையை அவித்துக் குடித்தால் இந்த நோய் மீண்டும் வராதபடி போக்கவல்லது. ஆனால் குடிக்கமுடியாத கசப்பானது. இதனால் எவரும் இதை நாடுவதில்லை. வேம்பின் எல்லாப் பாகங்களும் சித்தவைத்தியம் மூலம் நமக்கு நற்பலன் தருகிறது. முதிய வேம்பின் பலகை மிக வைரமானது. வீட்டுக்கதவு, நிலை, யன்னல் மற்றும் இதர தளபாடங் களுக்கு மிகச் சிறப்புடையது.

வேப்பமரம் தெய்வீகமானது. இம்மரத்தின் அடியுடன் சூழலையும் சுத்தமாகப் பராமரித்து வணங்க வேண்டும். பில்லி, சூனியம், ஏவல், கெட்ட தேவதைகள் எதுவும் இச்சூழலை அணுக மாட்டாது. விஷகடிக்கும் இதன் இலை உபயோகமாகிறது. இப்புனித மரத்தை வலம்வந்து வணங்கி வந்தால் அதிக பலனும் மனநிறைவும் ஏற்படும்.

## அறுகு

அறுகு ஒரு தெய்வீகப் புல்லினம் ஆகும். வீட்டில் புனிதமான இடத்தில் (கழிவு நீர் புகாத இடத்தில்) வளர்க்கலாம். விநாயகப் பெருமானின் அதிசிறந்த விருப்பத்துக்குரிய அர்ச்சனைப் பொருளாகும். தினமும் பூசையறையில் காலையில் வணங்கும்போது தவறாது விநாயகப் பெருமானுக்கு குறைந்தது ஒரு அறுகேனும் எடுத்து உள்ளன்போடு சார்த்தினால் நிறைவான வாழ்வு கிட்டும். தீராத கவலைகள் ஏற்படுமிடத்து விநாயகரை வேண்டி (எவருக்கும் இது பற்றிக் கூறாது) 21 நாட்கள் காலையில் 21 அறுகு சார்த்தி உள்ளன்போடு வழிபட்டால் விக்கினங்கள் அகலும். எண்ணியது கைகூடும். மனநிறைவு ஏற்படும் (இது புராண வரலாறு). சித்த வைத்தியத்தில் ஒரு மூலிகையாகவும் அதிக பலன் தருகிறது.

## கற்பூரவள்ளி

சிறுபிள்ளைகள் உள்ள வீட்டில் அவசியம் இச்செடியைப் பேணி வளர்க்க வேண்டும். இது கற்பூரம் போலச் சுகந்த மணமுடைய மூலிகைச் செடியாகும். இதன் மருத்துவ குணம் மிகச் சிறப்புடையது.

❋ ❋ ❋



# எழுந்தவருக்கு ஏழு கடமைகள்

நாம் நற்சிந்தனைகளுடன் இயல்பாகவே மனநிறைவுடன் வாழத் தினமும் நித்திரை விட்டெழுந்ததும் செய்யவேண்டிய அத்தியாவசியமானவற்றை நோக்குவோம்.

(1) சூரியன் உதிக்க முன் எழுந்ததும் (காலைக்கடன் முடிந்த பின்) சூரிய பகவானைத் துதிக்க வேண்டும்.

(2) காலையில் எழும்போதும், குளித்த பின்பும், உணவு உண்ண முன்பும் அவரவர் இஷ்ட தெய்வத்தை வணங்க வேண்டும்.

(3) நெற்றியில் சமயச் (சிவ) சின்னங்கள் தரிக்க வேண்டும்.

(4) வீட்டில் வணக்கத்திற்கெனப் பூசை அறையையோ. வேறு அறையையோ ஒதுக்கி இஷ்ட தெய்வத்தின் திருவுருவத்துக்கு முன்னால் திருவிளக்கேற்றி ஊதுபத்தியோ, கற்பூரமோ ஏற்றித் துதிக்க வேண்டும்.

(5) எந்நேரமும் இஷ்ட தெய்வத்தின் திருநாமத்தை இடையறாது உச்சரிக்க வேண்டும்.

(6) தினமும் சிறிது நேரம் ஒதுக்கிச் சமயநூல்களில் ஏதேனும் ஒன்றில் ஒரு சில பக்கங்களையாவது மனப்பூர்வமாக வாசிக்க வேண்டும்.

(7) வீட்டில் மாலை வேளையில், பிரதானமாகப் பூசையறையில் அகல் / குத்துவிளக்கேற்றுவது பெண்களின் தலையாய கடமை. பெண்கள் விளக்கேற்றித் திருமகளை வரவேற்க வேண்டும்.

மேற்கூறிய ஏழு விடயங்களைச் செய்ய காலவிரயமோ, பொருட்செலவோ தேவையில்லை. நாளாந்தக் கடமைகளுடன் இவற்றைச் செய்யும்போது ஆன்மிக உணர்வால் வீணான தீய சிந்தனைகள் நம்மை அணுகாமல் நற்பயனடையலாம்.

❋ ❋ ❋

> பேசுவதை விட மௌனமே சிறந்தது. பேசித்தான் தீரவேண்டுமானால், அந்தப் பேச்சு உண்மையாய், நேர்மையாய், இனிமையாய் இருக்கட்டும்.
>
> **- மகாபாரதம் -**

# நாளொருமேனி பொழுதொரு தவறுகள் முப்பது!

பண்டிகைக் காலங்களில் நாம் சுத்தமாகவும், உள்ளத் தூய்மையாகவும் இருக்க வேண்டும். நாம் ஒரு சில காரியங்களைக் கடைப்பிடித்து நன்மையடையச் சில வழிகள் தரப்பட்டுள்ளன.

(1) சூரிய உதயத்தின் பின்பும் உறங்கினால் வீட்டில் செல்வம் சேராது.

(2) பகலில் தூங்குவது, குளிக்காமல் சாப்பிடுவது, இறைவனுக்கு நிவேதனஞ் செய்யாமல் உண்பது, அதிதிகளுக்கு அன்னமிடாது உண்பது, ஏகாதசியன்று விரதமிருக்காது சாப்பிடுவது, சந்தியாகாலத்தில் உறங்குவது இவையாவும் தரித்திரத்தைப் பெருக்கும். இவற்றில் முதியோர், நோயாளிகள், குழந்தைகள், தீட்டுள்ளவர்கள் விதிவிலக்காவர்.

(3) நின்றுகொண்டே நீராகாரம் பருகக்கூடாது. இருந்துதான் பருக வேண்டும்.

(4) தண்ணீரை வீணாக விரயஞ்செய்தால் செலவுகள், கடன் பெருகும்.

(5) கதவுகள், யன்னல்கள் மீது ஈரத்துணிகள், உலர்ந்த ஆடை களைப் போட்டால் கடன் அதிகரிக்கும்.

(6) தீபம், மணி, தர்ப்பம், முத்து, இரத்தினமாலை போன்ற பூசைக்குரியனவற்றை வெறும் தரையில் வைக்கக்கூடாது. எரியும் தீபம், மெழுகுவர்த்தி, கற்பூரம் ஆகியவற்றின் உபயோகம் முடிந்தபின் வாயால் ஊதி அணைக்கக்கூடாது. கையால் வீசியே அணைக்க வேண்டும்.

(7) நீர்நிலைகளில் எச்சில் துப்பக்கூடாது. சூரியன், பசு, கோயில் இவைகளுக்கு எதிரே மலசலம் கழிப்பதால் ஊருக்கு பீடை ஏற்படும்.

(8) சுயஸ்துதியில் ஆயுள் குறையும்.

(9) வியாழன், ஞாயிற்றுக்கிழமைகளில் எவரையும் விருந்துக்கு அழைக்கக்கூடாது. விசேட வைபவங்கள், பண்டிகைகள் விதிவிலக்காகும்.



(10) வடக்கு நோக்கியிருந்து மந்திரங்கள், நாமாவலிகள் சொன்னால் புண்ணியம் இருமடங்காகும்.

(11) ஆண்கள் அதிகம் தலைமுடி வளர்த்தால் தரித்திரம் சேரும்.

(12) எவரேனும் கூடுதலாக நகம் வளர்த்தால் துன்பமும் வறுமையும் வரும்.

(13) வீட்டினுள் இருந்து நகத்தை வெட்டக்கூடாது.

(14) வீட்டினுள் தலைமுடி விழாமல் கவனிக்க வேண்டும். விழ நேர்ந்தால் அவ்விடம் சுத்தம் செய்யப்பட வேண்டும்.

(15) நெற்றியில் சூரிய வெளிச்சம் படும் வண்ணம் நெற்றியைத் தலைமுடியால் மறைக்காது பராமரித்தால் அறிவு விருத்தியாகும்.

(16) தீபாவளி தவிர ஏனைய நாட்களில் காலையில் எண்ணெய் தேய்த்து நீராடக்கூடாது.

(17) குளிக்கும்போதோ, கால்கழுவும்போதோ ஒரு காலை மற்றைய காலால் தேய்க்கக்கூடாது.

(18) இரு கைகளாலும் தலையைச் சொறிந்தால் தரித்திரம் உண்டாகும்.

(19) இருக்கும்போது காலாட்டும் பழக்கமோ, கால்மேல் கால் போடும் வழக்கமோ உடன் நிறுத்தப்படல் வேண்டும். இதனால் உங்கள் நெருங்கிய உறவினர்களுக்கு நோய், நொடி, மரணம் ஏற்படலாம்.

(20) கருகுமாலையில் வீட்டின் பின்புற (கொல்லைப்புற) கதவுகளைத் திறந்துவிடலாகாது.

(21) அர்த்தம் புரியாமல் சுலோகங்கள், மந்திரங்களை உரத்த குரலில் சொல்லலாகாது.

(22) வீட்டில் மிஞ்சிய உணவைத் தானும் உண்ணக்கூடாது. ஏனையவருக்கும் வழங்கக்கூடாது.

(23) வீட்டில் வளரும் பிராணிகள், பறவைகளைக் கொன்று உண்ணக் கூடாது.

(24) கிளி, மைனா போன்ற பறவைகளை வீட்டில் கூண்டுகளில் அடைத்து வளர்க்கக்கூடாது. இதனால் கஷ்டங்கள், சிறை வாசம் கிடைக்கலாம்.

(25) பெண்கள் ஈரத்துணிகளுடன் விரதம் அனுஷ்டிக்கக்கூடாது. தலைவிரித்துக் கொண்டும், ஈரஉடை அணிந்து கொண்டும் உணவு பரிமாறக்கூடாது.

(26) பகலில் உடலுறவு கொள்ளக்கூடாது.

(27) அவரவர் பலாபலன்கள் தசாபுத்திகளின்படி வீட்டைச் சுற்றிச் சில தேவதைகள் பாதுகாவலுக்காக இருக்கும். வீட்டில் அது இல்லை, இது இல்லையென்று சொல்லிக்கொண்டேயிருந்தால் அதை உங்கள் கட்டளை என அறிந்து அத்தேவதைகள் உங்கள் வீட்டிலிருந்து இல்லாமற் போய்விடும். அதற்குப் பதிலாக நாளை வாங்கிக் கொள்கிறேன், நாளை கொடுக்கிறேன் என்ற வார்த்தைகளையே உபயோகிப்பது நல்லது.

(28) அவரவர் குலதெய்வங்களுக்கான சிறப்பு நாட்களிலும், அயல் கோயில்களில் விசேட பெருவிழாக் காலங்களிலும், விரத நாட்களிலும், செவ்வாய், வெள்ளி, சனி ஆகிய நாட்களிலும் தலைமுடி வெட்டுதல் தவிர்க்க வேண்டும்.

(29) காலை எழுந்தவுடனும், படுக்கைக்குச் செல்லும்போதும் குல தெய்வத்தையோ, விநாயகரையோ துதித்துக்கொண்டே செயற்பட வேண்டும்.

(30) வந்த விருந்தினரை நிற்கவைத்துத் தானங்கள், பரிசுகள் கொடுக்கக்கூடாது. இருக்க வைத்துத்தான் கொடுக்க வேண்டும்.

❋ ❋ ❋

**காகத்துக்கு உணவிடுவோம்**

நாம் உணவு உண்ணும் முன் காகத்துக்கு ஒரு பிடி உணவேனும் வைத்தல் வேண்டும். ஏனெனில், எமது முன்னோர்களும், பித்ருக்களும், பித்ருதேவதைகளுமே காகத்தின் உருவில் வருவதாக ஐதீகம். அவர்களின் ஆசியால்தான் நாம் இவ்வுலகில் மகிழ்வாகவும், அமைதியாகவும், நிம்மதியாகவும் வாழமுடிகிறது. எனவே அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும்பொருட்டு காகத்திற்குத் தினமும் உணவிடுவது அவசியமாகும். கணவன், மனைவியரிடம் ஒற்றுமை வளர்ந்து குடும்பத்தில் அமைதி நிலவ வழியேற்படுகிறது. மற்றும் சனீஸ்வர பகவானின் வாகனமாகையால், காகத்திற்கு உணவை அளிப்பதன் மூலம் சனி பகவானின் தீயபலன்களிலிருந்து விடுபடுவது மட்டுமன்றி ஆண்டவனின் பரிபூரண அன்பையும், அருளையும் பெற்றுக் கொள்ளலாம்.



# பெண்கள் செய்யக்கூடாதவை

நெருப்பை வாயால் ஊதி எழுப்பவோ, அணைக்கவோ கூடாது. உரல், அம்மி, உலக்கை, வாசற்படி, முறம் (சுளகு) இவைகளின் மீது அமர்ந்திருக்கக் கூடாது. இரவில் மிஞ்சிய உணவை மட்பாத்தரங்களில் வைத்திருக்கக்கூடாது. அன்னம், உப்பு, நெய் இவைகளைக் கையால் பரிமாறக்கூடாது. உப்பும் நெய்யும் எச்சிலாக்கிய பின் பரிமாறக்கூடாது. பெண்கள் கூந்தல் நுனியைப் பூமியை நோக்கி நிற்காமல் கொண்டை போட்டோ, மடித்துக் கட்டியோ விடவேண்டும். தவறாது தலைவாரிப் பூச்சூட வேண்டும். பிறநாட்டு நாகரிகத்தில் சிக்கியதால் இன்றைய சில பெண்கள் தலைவிரி கோலமாக (கட்டி ஒழுங்கு செய்யாது) கூந்தலை அலைய விடுவது நமது தமிழ்ப் பண்பாட்டிற்கு ஒவ்வாது. இதனால் நாட்டுக்குக் கேடு விளையும். கோயில்கள், விசேட நிகழ்வுகள், திருமண விழாக்களில் அணியும் ஆடைகள் கரிய நிறம் தவிர்க்கப்படுவது இலட்சுமி கரமாகும். கூந்தலின், ஆடை அணிகளின் அலங்கார வசீகரமான செயற்கை அழகிலும் ஒரு பெண்ணுக்கு கல்வி அழகே அழகு.

**(வாரியார் உரையிலிருந்து)**

குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலமையால்
கல்வி அழகே அழகு.

**(நாலடியார் – செய்யுள் 131)**

❋ ❋ ❋

நாம் எவ்வளவு பணம் தேடுகிறோம் என்பதில் மகிழ்ச்சியில்லை. நாம் ஈட்டிய பொருளில் எவ்வளவு தர்மம் செய்கியோம் என்பதில்தான் இருக்கிறது.

**- தாகூர் -**

# பெரியோர் கூறும் அறநெறிகள்

(1) பிரம்ம முகூர்த்தத்தில் (அதிகாலை) எழுந்து ஆன்மநலனை (இறைவனை)ச் சிந்திக்க வேண்டும். அறம், நியாயமானது. ஆளைகளைப் பூர்த்தி செய்வது, தன்வாழ்க்கைக்காக அற நெறியில் பொருள் சேர்ப்பது போன்ற செயல்களை அதற்குரிய நேரத்தில் செய்ய வேண்டும்.

(2) பாதையால் செல்லும்போது முதியவர்கள், பாரம் சுமந்து வருபவர்கள், அரசர்கள், வேதம் பயிலும் பிரமச்சாரிகள் (சந்நியாசிகள்), பெண்கள், நோயாளிகள், சமய குரவர்கள் ஆகியோருக்கு வழிவிட வேண்டும். இவர்களுள் அரசரே முக்கியமானவர். பிரமச்சாரியோ அரசர்களாலும் போற்றப் படுபவர்கள்.

(3) அகிம்சை, வாய்மை, திருடாமை, தூய்மை, புலனடக்கம், தானம், நலிவுற்றோர் மீது கருணை காட்டல் ஆகியவை தர்மவழிகளாம்.

(4) வயது, அறிவு, செல்வம், பேச்சுத்திறமை, அணிந்திருக்கும் ஆடை, தாங்கள் செய்யும் செயல்களுக்கேற்ப வருமானத்தை மக்கள் தேடிக்கொள்ள வேண்டும்.

(5) தன் வாழ்க்கையை நடத்துவதற்கு தனிமையில் வசிப்போர், அரசர்கள் அல்லது நன்நடத்தை உடையவர்களிடம் தான் செல்வத்தை நாடவேண்டும். அகங்காரமுடையவர்கள், சந்தேகப் படுபவர்கள், மற்றும் பாசாங்குகாரர்களிடம் செல்வம் பெறக் கூடாது.

(6) வேதங்களைக் கற்பதால் அல்லது தவம் செய்தால் மட்டும் ஒருவன் நன்நடத்தையைப் பெறமாட்டான். எவனுடைய செயல் களில் கல்வியும் தவமும் வெளிப்படுகிறதோ அவனே நன் நடத்தை உடையவன்.

(7) சாமம், தானம், பேதம், தண்டம் ஆகிய நான்கு முறைகளைப் பின்பற்றிச் செயல்புரிந்து வெற்றி பெறலாம். சாமம், தானம், பேதம் ஆகிய முறைகளைப் பின்பற்றியும் காரியம் கைகூடாத போது இறுதியில்தான் தண்டத்தைக் கையாள வேண்டும்.

(8) ஒரு சக்கரத்தால் மட்டும் வண்டி ஓடாது. அதுபோல அதிஷ்டம் இருந்தும் சுயமுயற்சி இல்லையென்றால் நாம் வெற்றிகாண முடியாது.

(9) இந்த உலகம் வாழைத்தண்டு போல் சாரமற்றது. நீர்க்குமிழி போல் நிலையற்றது. இத்தகைய உலகில் அழிவின்மையை எதிர்பார்ப்பன் மூடன்.

❋ ❋ ❋



# பாவையர் பின்பற்றினால் குடும்பமே உயரும்

பக்தவிஜயம் என்னும் மகா சரித்திரத்திலுள்ள புனித மங்கையர்களின் புண்ணிய சரித்திரங்களைப் படிப்பதாலும், கேட்பதாலும் நமக்கு எல்லா நன்மைகளும் ஏற்படுகின்றன. பக்திமிகும் இப்பெண்கள் தமது உடல், பொருள், ஆவி அனைத்தையுமே பரமனுக்காக அர்ப்பணித்த பெருந்தகையினர். இப்படியான உத்தமி களின் வரலாற்றைப் படிப்பதால் நாம் பல அரிய போதனைகளையும் உண்மைகளையும் அறிந்துகொள்கிறோம்.

(1) ஒரு பெண்ணின் நெற்றியில் திலகம் எந்தநேரமும் இருக்க வேண்டும்.

(2) இரண்டு கைகளாலும் தலையைச் சொறியக்கூடாது.

(3) பூசனிக்காயை உடைக்கக்கூடாது.

(4) கர்ப்பிணிகள் தேங்காயை உடைக்கக்கூடாது. உடைக்கும் இடத்தில் இருக்கவும் கூடாது. இது கர்ப்பத்துக்கு நல்லதல்ல.

(5) ஒரு தம்பதிகளைக்கூட விடாது கலைப்பது மகாபாவம். கலைத்தவர் சுமங்கலியாக வாழமுடியாது.

(6) இரவில் வீட்டைப் பெருக்கலாகாது. பெருக்கினாலும் குப்பையை வெளியே கொட்டக்கூடாது. பகலில் குப்பையை ஓரிடத்தில் குவித்து வைக்கலாகாது. அப்படியே மூலையில் குவித்து வைத்தால் அவர்கள் நாளும் கிழமையுமாக எல்லோருடனும் கலந்து இருக்க முடியாமல் மூலையில் இருப்பர். சுபநாளன்று வீட்டுக்காகாமல் போய்விடுவர்.

(7) அதிகாலையில் எழுந்து வீட்டுவாசலில் (சாணம் தெளித்து) பெருக்கிக் கோலம்போட வேண்டும். விடியுமுன் குளித்து வீட்டுக்கு விளக்கேற்ற வேண்டும்.

(8) கையால் காற்கறிகளையோ, அன்னத்தையோ பரிமாறக்கூடாது. அதற்குப் பலன் கிடைக்காது.

(9) கணவனின் உத்தரவில்லாமல் தர்மம் செய்தல், உபவாசமிருத்தல் ஆகியன கணவனின் ஒரு நாள் ஆயுளைக் குறைக்கும்.

(10) எந்தப் பொருளையும் இல்லை என்று சொல்லல் ஆகாது. அதைம வாங்கி வாருங்கள் என்றே கூறவேண்டும்.

(11) எந்தக் குறையையும் எண்ணி கண்ணீர் விடக்கூடாது. அழுத வீட்டில் செல்வம் நிலைக்காது என்பது ஆன்றோர் வாக்கு.

(12) ஒரு இலைக்குப் பரிமாறிய மிகுதியை இன்னொருவருக்குப் பரிமாறக்கூடாது. கரண்டியால் பரிமாறினால் தோஷம் வராது.

(13) தலையை விரித்துப் போட்டுக்கொண்டு உட்காரக்கூடாது; நடக்கவும் கூடாது.

(14) எந்த நேரத்திலும் அமங்கலமான சொற்களைச் சொல்லக் கூடாது.

(15) கோபம் வரும்போது மனதை அடக்கிக்கொண்டு, கடவுளே எனக்கு நல்ல அமைதியைத் தாரும் எனக் கூறிக்கொள்ள வேண்டும்.

(16) கற்பும், தெய்வபக்தியும், ஆசார அனுட்டானங்களும் கணவனின் ஆயுளை விருத்தி செய்யும். குடும்பத்தில் சகல செல்வங்களையும் பொங்கியெழச் செய்யும். யாவும் மங்கலமாக அமையும்.

❋ ❋ ❋

### நீதிவாக்கு

தைரியமே மனிதனுக்கு எங்கும் துணை. பெரியோர்களை அடுத்தே மனிதன் புத்திமான் ஆகிறான். மக்களைத் தாங்கும் தாய் பூமியைக் காட்டிலும் கனமானவள். ஆகாயத்தைக் காட்டிலும் உயர்ந்தவர் தந்தை. காற்றைக் காட்டிலும் வேகமானது மனம். புல்லிலும் அற்பமானது கவலை. யாத்திரை செல்பவனுக்கு தோழன் வித்தை. வீட்டில் இருப்பவனுக்குத் தோழன் மனைவி. இறக்கப்போகும் வயோதிபனுக்கு நண்பன் தானமே. நல்லொழுக்கம்தான் சுகம் தரும். கர்வத்தை விடுபவன் மற்றையவர்களின் அன்புக்குப் பாத்திரமாகிறான். கோபத்தை விட்டால் துயரம் போகும். ஆசையை அகற்றுபவன் செல்வந்தன் ஆகிறான்.

### முழு மனிதனாக இரு

மனிதன் குறையுடையவன் மட்டுமல்ல, குறை காணுபவனும் ஆவான். பிறர் குறைகளைக் காண்பவன் அரை மனிதன், தன் குறையைக் காண்பவன் முழுமனிதன் ஆகிறான்.



# பெண்களுக்கான ஒருவரிச் செய்திகள்

- கன்னிப் பெண்கள் குங்குமத்தை நெற்றிப் புருவங்களின் மத்தியிலும் திருநீற்றை மேற்பகுதியிலும் தரித்துக்கொள்ள வேண்டும்.
- கன்னிப் பெண்கள் கோயில்களில் ஹோமிச்சம்பழ மூடி விளக்குப் போடுவதால் மனதுக்கேற்ற மணவாழ்க்கை அமையும்.
- கன்னிப் பெண்கள் இல்லத்தில் குத்துவிளக்குப் பூசையும் அம்மன் பூசையும் செய்யலாம்.
- பெண்கள் எடுத்த காரியங்கள் நிறைவேறவும், நினைத்ததை வெற்றி பெறவும், திருமணம் தடையின்றி நடக்கவும் "கேதாரகௌரி" விரதம் இருக்கலாம்.
- வீட்டிலுள்ள நெற்களஞ்சியத்தில் நெல் நிறைக்க, கன்னிப் பெண்களும், கர்ப்பிணிப் பெண்களுமே உகந்தவர்கள்.
- பெண்கள் கணபதி ஹோமம் செய்து வழிபட்டால் விரைவில் திருமணம் நடைபெறும்.
- பெண்கள் துளசி பூசை செய்வது மாங்கல்ய பலத்தை அதிகரிக்கச் செய்யும்.
- மனைவி வீட்டுவாசலில் கோலம் போட்ட பின்னரே கணவன் அதைத் தாண்டி வெளியேறுதல் வேண்டும்.
- சாளக்கிராம மூர்த்திகளைக் கையால் தொட்டுப் பூசை செய்யப் பெண்கள் குரு உபதேசம் பெறவேண்டியதில்லை.
- குடும்பத்தைப் பராமரிக்கும் பெண்களுக்கு எவ்வித விரதமும் அவசியமில்லை.
- இல்லம் தேடி வரும் மங்கையருக்கு உணவளித்து உபசரிக்க வேண்டும். இல்லையெனில் குறைந்தபட்சம் பருக நீராவது தரவேண்டும். இப்படிக் கொடுப்பவர்களுக்கு மாங்கல்ய பலமும், பெறுபவர்களுக்குச் செல்வமும் உண்டாகும்.
- பெண்களின் இரு நெற்றிப் புருவங்களுக்கிடையே ஓர் அலட்சுமி வசிப்பதாக நமது வேதங்கள் கூறுகின்றன. இங்கே குங்குமம் இட்டுக்கொள்வதால் அந்த அலட்சுமியால் ஏற்படக்கூடிய கேடு விலகி மாங்கல்யப் பலமும் செல்வங்களும் பெருகும்.

❁ பெண்களைத் தெய்வமாக மதித்துப் போற்றும் மனம் படைத்தவர்களிடம் திருமகள் வாசஞ்செய்கிறாள் என்பதைப் புராணங்கள் கூறுகின்றன.

❁ பெண்கள் தலைக்கு மேல் இரு கைகளையும் உயர்த்திக் கும்பிடலாது. ஆண்கள் அட்டாங்க நமஸ்காரம் செய்யவும், பெண்கள் அவர்களின் உடல்நிலைக்கேற்ப பஞ்சாங்க நமஸ்காரம் செய்யவும் வேண்டும். பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரம் செய்து எழுந்து நின்று தலைக்குமேல் கைகளை உயர்த்தவோ, நீட்டவோ கூடாது. தமது கைகளை மார்புக்கு நேராகக் குவித்துத் தலைசாய்த்து வணங்குவது சிறந்த முறையாகும்.

❁ ❁ ❁

### பெரும் சுகம் பெறுபவர் யார்?

தன் சுகம் பெரிதில்லை என்று நினைக்கிறவர்களால்தான் மற்றவர்களை வசப்படுத்த முடியும். எங்கும் தியாக குணம் இருந்தால் தான் சுகம் சௌகர்யம் மேம்படும், வழிபிறக்கும். கணவரது நலனுக்காகவே தன் சுகத்தைப் பூரணமாகத் தியாகம் செய்யும் மகளிரைத்தான் முனிவர்கள் பதிவிரதைகள் என்கின்றனர். மணாளனை மகாவிஷ்ணுவாக மதிக்கும் மனைவிக்கும், மனைவியை மகாலட்சுமியாக மதிக்கும் கணவருக்கும் பெரும்சுகம் தரும் வேறு வைகுண்ணம் தேவையில்லை என்கிறார் சுகப்பிரம்மர்.

### கர்ப்பம்

27 நட்சத்திரங்களைக் கொண்டது ஒரு நட்சத்திர மாதம். இது 27 நாட்கள் 8 மணி நேரம் கொண்டது. இதனைப் பத்தால் பெருக்கினால் 273 நாட்கள் 8 மணி நேரம் கர்ப்பம் கருப்பையில் வளரும். எந்தப் பெண் எந்த நட்சத்திரத்தில் கருத்தரிக்கிறாளோ அந்த நட்சத்திரத்தில்தான் அவளுக்குக் குழந்தை பிறக்கும்.



# குடும்பத்தில் மங்களம் நிலவ...

நமக்குக் குடும்பத்தில் மங்களம் பொங்கவும், மங்களகரமான சடங்குகள் நடைபெறவும் நாம் கடைப்பிடிக்க வேண்டிய பல நல்ல தர்மநெறி முறைகளை மகான்கள் சொல்லியிருக்கிறார்கள். கஜபூசை, கோபூசை, கலசபூசை, சுமங்கலிபூசை செய்வோர்க்கு வாழ்க்கையில் வெற்றிகிட்டும். ஏழைப்பெண்கள் திருமணத்திற்கு உதவுவதும், நலிந்தோரின் பிரேத அடக்கத்திற்கு உதவுவதும் ஆயிரம் அஸ்வ மேத யாகம் செய்த பலனைத் தரும். பலகாலஞ் செய்த பாவங்கள் சில காலஞ் செய்கின்ற நற்காரியங்களினால் புண்ணியத்தைப் பெறுகிறது.

வீட்டில் துளசிச்செடியை வளர்ப்பதால் நமக்கு முற்பிறப்பில் செய்த தீவினைகள் அறுகின்றன.

சுமங்கலிகளைப் பூசித்து வந்தால் மிகுந்த செல்வங்கள் சேரும். அதிதிகளை உபசரிப்பதால் நிலையான பேரின்பம் பெருகும். சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் ஆலயம் அமைப்பதும் அல்லது அத் திருப்பணிக்கு நம்மால் இயன்றளவு உடலுதவியும், பொருளுதவியும் செய்வதும் பெரும் புண்ணியத்தைச் சேர்ப்பதாகும். இம்மையிலும் மறுமையிலும் நிலையான இன்பம் பெருகுவதற்கு திருப்பணி ஓர் ஒப்பற்ற பேரின்ப மார்க்கமாகும்.

❁ ❁ ❁

### ஞாபகசக்திக்கு...

குழந்தைகள் படித்தவற்றை மனதில் பதியவைப்பதற்கும், கல்வி வளரவும் கீழ்க்கண்ட மந்திரத்தை தினமும் செபஞ்செய்ய வேண்டும். “ஸ்ரீவித்யா ரூபிணி, சரஸ்வதி, சகலகலாவல்லி, சரம்பிம்பதாரி, சாரதா தேவி, சாத்திரவல்லி, வீணாபுத்தகதாரணி வாணி, கமலபாணி, வாக்தேவி, வரதநாயகி, புத்தக ஹஸ்தே நமோஸ்துதே.”

# விளக்கேற்றுவோம்

திருவிளக்கு வீட்டிற்கு அலங்காரம். அந்த விளக்கினை முறையோடு ஏற்றும் பெண்கள் அலங்கார அம்பிக்கைகள்; அதிஷ்ட தேவதைகள்.

விளக்கிற்கு நெய்விட்டு ஏற்றுவது குடும்பத்திற்கு நல்ல குதூகலத்தையும், குடும்ப நலத்தையும் கொடுக்கிறது. நல்லெண்ணெய் ஊற்றி விளக்கேற்றுவதால் ஆரோக்கியத்துடன் வாழலாம்.

**திரிகளின் வகைகள்:** பஞ்சினால் திரியிடுவது மிகவும் நல்லது. தாமரைத் தண்டிலிருந்து திரித்து ஏற்றுவது சிறப்புடையதாகும். முன்வினைப் பாவத்தைப் போக்கும். செல்வம் நிலைத்து நிற்கும். வாழைத்தண்டிலிருந்து திரித்து விளக்கேற்றுவதால் குழந்தைச் செல்வம் உண்டாகும்; தெய்வ குற்றம், குடும்பச் சாபம் முதலியவை நீங்கும்.; சாந்தி நிலவும். வெள்ளெருக்கின் பட்டையிலிருந்து திரித்துத் தீபம் ஏற்றினால் பெருஞ்செல்வம் சேரும். பேய் பிடித்தவர்களுக்கு அதன் தொல்லைகள் நீங்கும்.

புதிய மஞ்சள் நிறத் துணியில் திரிசெய்து தீபமேற்றுவதால் குபேர சம்பத்தும், திருமண பாக்கியமும், புத்திரபாக்கியமும் உண்டாகும். புதிய சிவப்பு நிறத் துணியில் திரிசெய்து தீபம் ஏற்றினால் சகல தோஷங்களும், வறுமை, கடன் முதலியன நீங்கும். புதிய வெள்ளை நிறத் துணியில் திரிசெய்து தீபம் ஏற்றினால் உத்தமமான பலன்கள் வந்துசேரும். நெய், விளக்கு எண்ணெய், நல்லெண்ணெய், வேப்பெண்ணெய், தேங்காயெண்ணெய் ஆகியவற்றைச் சம அளவில் கலந்து பஞ்சமுக (குத்து) விளககில் ஐந்துமுக தீபத்தை வீட்டில் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் காலை 430 தொடக்கம் 6.00 மணிக்குள் (பிரம்மமுகூர்த்தம்) ஏற்றி வழிபட்டால் அஷ்டலட்சுமி ஐஸ்வரியங்கள் குடும்பத்தில் விரைவில் பெருகும். ஒருமுக திரிதீபத்தை (காமாட்சி விளக்கு) கிழக்காக ஏற்றினால் துன்பம் விலகும், மனையில் மங்களம் பொங்கும் மேற்காக ஏற்றுவதால் ஆரோக்கியம், ஆயுள் கூடும். வடக்காக ஏற்றுவதால் தனதானிய சம்பத்துப் பெருகும். தெற்காக ஏற்றக்கூடாது.

❋ ❋ ❋

அசைவ உணவை அறவே தவிர்ப்பதும், தான தர்மங்களையும் தோஷயோக பரிகாரங் களையும் உங்கள் கைகளாலேயே விளம்பரம் இல்லாமல் செய்வதும், பறவைகள் வாசஞ்செய்யும் மரங்களைக் காப்பதும், வாயில்லாத சீவன்களுக்கு உணவு, இடம் தந்து உதவுவதும் சக்திவாய்ந்த யோக பரிகாரங்களாகும்.



# குங்குமம்

## குங்குமம் வைப்பதன் நன்மைகள்

மஞ்சள், படிகாரம், சுண்ணாம்பு இவற்றைக் கலந்து குங்குமம் செய்யப்படுகிறது. இவை மூன்றும் கிருமிநாசினிப் பொருட்கள் ஆகும். மனித உடலில் தெய்வசக்தி வாய்ந்த நெற்றிக்கண் - அதாவது இரு நெற்றிப் புருவங்களுக்கிடையேயுள்ள பகுதியில் குங்குமத்தை வைத்தால் அமைதி கிடைக்கும்.

ஹிப்நாட்டிஸம் உட்பட எந்தச் சசக்தியையும் முறியடிக்கும் சக்தி குங்குமத்துக்கு உண்டு. உடலிலிருந்து மூளைக்குச் செல்லும் நரம்புகள் எடுத்துச் செல்லும் உஷ்ணத்தைக் கட்டுப்படுத்துவது நெற்றிப் பகுதியேயாகும். இந்தப் பகுதியில் குங்குமத்தை வைப்பதால் உஷ்ணம் குறையும்.

குங்குமத்தின் மீது சூரியஒளி படுவதால் அதிலுள்ள மூலிகைச் சக்திகளுடன் விற்றமின் (சீவசித்து) டி சக்திமிக்க அல்ட்ரோஸூம் உடலுக்குள் சென்று நன்மை உண்டாகிறது. இந்தச் சக்தி பெண்களுக்கு மிகவும் நல்லது. இதனால்தான் எமது பெண்கள், குங்குமம் வைப்பதைப் பெரியோர்கள் கட்டாயமாக வைத்திருக் கிறார்கள்.

சுமங்கலிகள் பொதுவாக நெற்றியில் அவசியம் எந்தநேரமும் குங்குமம் அணிவது ஒரு தனி அழகாகும். மங்கல விழாக்கள், கோயில்களில் நெற்றிக் குங்குமம் ஒரு சிறப்பான அழகையே தருகிறது. விதவையான பின் அன்னை சாரதாதேவி நெற்றியில் குங்கும் அணிவதை நிறுத்தினார். எந்தநேரமும் நெற்றிக்குங்குமத்துடன் தனது பதிவிரதையின் சிறப்பை அறிந்தவர் கணவரான இராமகிருஷ்ணர். இதனால் இராமகிருஷ்ணர் அன்னையின் கனவில் தோன்றித் தான் உடல்நிலை மாறினாலும் உள்ளம் (உயிர்) அன்னையின் தெய்வீகப்பணிக்கு ஆதரவு தருவதன் பேரில் அச் சூழலிலிருப்பதாகவும் கூறினாராம். இதனால் அன்னை தொடர்ந்து தவறாது எந்தநேரமும் குங்குமம் அணிந்தே காட்சிதருவார். எனவே பெண்கள் தவறாது எந்தநேரமும் நெற்றியில் குங்குமம் அணிவது சிறப்பாகும்.

**– வாரியார் உரையிலிருந்து –**

❋ ❋ ❋

# விரதங்கள்

**காரடையா நோன்பு**

அன்பகலாத கணவன் அமைய வேண்டும் என்பதற்காகப் பெண்கள் மேற்கொள்ளும் புனிதமான நோன்பு இதுவாகும்.

காஞ்சியில் காமாட்சியாகத் தேவி இந்த விரதத்தை மேற் கொண்டதால், காமாட்சி விரதம் என்றும் அழைக்கப்படுகிறது. ஏகாம்பரேஸ்வரராக வந்து ஆட்கொண்ட ஐயன் அன்னை காமாட்சியைத் திருமணம் செய்தருளினார்.

தன் கணவன் சத்தியவானின் உயிரை எமனிடமிருந்து மீட்கச் சாவித்திரியும் இதேபோன்ற காமாட்சி (காரடைய நோன்பு) விரதத்தை மேற்கொண்டு தன் முயற்சியில் வெற்றியடைந்தாள்.

திருமணமான பெண்கள் தாங்கள் நீண்ட நாள் சுமங்கலிகளாக வாழ, இந்நாளில் (மாசிமகப் பூரணை) விரதம் மேற்கொள்வார்கள். திருமணமாக வேண்டிய பெண்களும் தங்களின் மணவாழ்க்கை இனிமையாகவும், நீடித்தும் அமைய இந்த விரதத்தைக் கடைப் பிடிக்கிறார்கள்.

இப்புனித நாளில் சுமங்கலிகள் திருமாங்கல்யத்தின் மஞ்சள் கயிற்றை (தாலி) மாற்றிப் புது மஞ்சள் கயிற்றினை அணிகிறார்கள்.

விரத நாளன்று காரடை தயாரித்து உருகாத வெண்ணெயுடன் அதனை அன்னைக்குப் படைத்து நலனடைகிறார்கள்.

**கோதாரகௌரி விரதம்**

ஆதியில் திருக்கயிலாய மலை மீது சிவபெருமானும் கௌரி தேவியும் தேவர்கள் புடைசூழ எழுந்தருளியிருந்தனர். சிவன் மீது அதிக நாட்டமுள்ள பிருங்கி மகரிஷி என்பவர் கௌரிதேவியை விட்டுச் சிவனை மட்டும் வலம் வந்தார். இதனால் தன்னை அவமதித்த முனிவரின் செயலைச் சிவனிடம் கேட்டபோது அவரது சமாதானம் ஏற்கமுடியாததால் வெறுப்புற்ற கௌரிதேவி இறைவனை விட்டுப் பிரிந்து பூலோகம் வந்தார்.



கௌதவ முனிவரின் ஆலோசனைப்படி கேதாரஞ் சென்று 21 நாட்கள் கடுந்தவம் செய்தார். சிவபிரான் கௌரிதேவியின் முன் தோன்றி தேவியின் சித்தப்படி என்றும் பிரியாதவாறு தனது இடப்பாகத்தில் இணைத்துக்கொண்டார். இணைந்த நிலையில் அர்த்தநாரீஸ்வரராகக் காட்சி தந்தனர்.

கேதாரத்தில் கௌரிதேவி முதலில் கடைப்பிடித்ததன் காரணமாகவே இவ்விரதம் கேதாரகௌரி விரதம் என அழைக்கப் படுகிறது. இப்பொழுது சமயபக்தி மிக்கவர்களால் சக்தி ஆலயங்களில் கூடுதலாகப் பருவமங்கையரும், சுமங்கலியான பெண்களும் பலநூற்றுக் கணக்கில் இவ்விரதத்தைக் கைக்கொள் கின்றனர். இவ்விரதம் புரட்டாதி மாத வளர்பிறை அட்டமி முதல் ஐப்பசி மாதம் தேய்பிறை சதுர்த்தசி வரையான 21 நாட்கள் கைக் கொளள்ப்படுகிறது. தீபாவளி அன்று வரையுள்ள 21 நாளும் கோயில் களில் சகல ஏற்பாடுகளும் செய்து கௌரிபூசையில் பங்கு பற்றுவதுடன் ஆசாரத்துடனும் அகத்தூய்மையுடனும் நோன்பிருந்தே விரதத்தை அனுட்டிக்கின்றனர். இறுதிநாளன்று கேதாரகௌரி விரதம் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. 21 நூல்களாலான 21 முடிச்சுக்கள் போட்ட நூற்கயிற்றை லிங்கத்தின் மீது சார்த்தி பக்தர்கள் வாங்கி கட்டிக்கொள்ள வேண்டும்.

இவ்விரதத்தினால் குடும்பத்தில் கணவன் மனைவி ஒற்றுமை நல்ல கணவன் / நல்ல மனைவி, நல்ல பிள்ளைகள், கல்வி, செல்வம், மனஅமைதி யாவும் கிட்டும். கூடுதலாகப் பெண்களே இவ்விரதத்தை கைக்கொண்டு எல்லா நலன்களையும் சிவசக்தியின் அருளாசியையும் பெற்று நலமுடன் வாழலாம்.

விரதங்களின் தொடரில் நவராத்திரி ஒன்பது நாட்கள் சக்தியின் விரதம், கந்தசஷ்டி - ஆறுநாட்கள் முருகனின் விரதம் இவை மிகவும் பரிசுத்தமாகவும், ஆசாரத்துடனும் கைக்கொண்டால் இப்பிறவியில் தேவையான சகலவற்றையும் பெற்று நிறைவுடன் வாழலாம். விரதங்களினால் மனிதன் அகமும் புறமும் பரிசுத்தம் அடையலாம்.

# பொங்கல் பண்டிகையின் தத்துவம்

நம் முன்னோர்கள் ஆடைக்குத் தீபாவளி, உணவிற்குட் பொங்கல் பண்டிகை என வைத்தனர் என்று எண்ணக்கூடாது. பூமி ஜீவசக்தியாக, கண்கண்ட தெய்வமாக, நோய்க்கிருமிகளை அழிக்கும் சூரியனுக்கு நன்றி சொல்லும் விழா பொங்கல். சூரியனின் அருளினாலேயே உழவனின் பயிர்கள் யாவும் சிறப்படைகின்றன. மனிதனுக்குப் பல உதவிகளைச் செய்யும் ஆநிரைகளுக்கும் நன்றி கூறும் பாங்கில் இவை இடம்பெறுகின்றன. எமக்கு இன்னருள் புரியும் ஆதவனுக்குத் தைப்பொங்கல். பற்பல உணவுப் பொருட்களையும் தரும் (கோமாதாவுக்கும் வயிலில் வேலை செய்யும் எருதுகளுக்கும்) ஆநிரைகளுக்கு நன்றியுடன் தைப்பொங்கலின் மறுநாள் பட்டிப் (மாட்டு) பொங்கல். இது வழமையான கருத்து. மேலும் தத்துவ ரீதியாக நோக்குவோம்.

குடும்பப் பொங்கல் விழாவில் நமது ஆத்மீகப் பொங்கல் அடங்கியிருக்கிறது. நமது உடம்பு ஒரு சிறிய வீடு. அதனுள் நாம் (ஆன்மா) வாழ்கிறோம். நம்முடன் ஐவர் (பொறிகள்) இலவசமாக வாழ்வதோடல்லாமல் நம்மை அடக்கியாளவும் முயற்சிக்கிறார்கள். இவர்களை நாம் வென்று மதுரச்சோறு தினம் பகிர்ந்து உண்டு வாழவேண்டும். இதுவே அன்றாடம் நிகழும் ஆன்மீகப் பொங்கல். அகம் (மனம்) அடுப்பு. அடுப்புக்கு மூன்று கற்கள் தேவை. அன்பு, பொறுமை, அவா அறுத்தல் என மூன்றும் கற்களாகின்றன. ஞானக் கனல் விறகு, உயிர் கலசம் / பானை, அருள் - கருப்பஞ்சாறு. இறையின்பமே பொங்கியெழும். மதுரச்சோறு சர்க்கரைப் பொங்கல்.

✵ ✵ ✵

சிறுவர்களுக்கு அன்னப்பிராசனம் செய்யும்போது கிழக்குப் பக்கம் பார்த்து குழந்தையை உட்காரவைத்து உணவு ஊட்ட வேண்டும். அதுவும் கையால்தான் ஊட்ட வேண்டும். கரண்டி போன்ற உபகரணங்கள் உபயோகிக்கக்கூடாது. (உயிரினங்களில் மனிதன், யானை, குரங்கு ஆகிய மூன்று மட்டும் உண்ணும்போது கையைப் பாவிப்பதால் நடைமுறையை மாற்றாமல் கையைப் பாவிக்க வேண்டும். இதனால் குழந்தையும் தன் கையால் சாப்பிட்டுப் பெரியவர்களாகலாம்) என்பது தமிழர் கண்ட மரபு.



# சிந்தனைக்கு...

எமது செந்தமிழைப் பேணிய பல புலவர்கள் எமக்கு அறிவு தந்த நல்லுரைகளிற் சில அதிசிறப்பு வாய்ந்த அறிவுரைகளாகும்.

1. அன்னையும் பிதாவும் முன் அறிதெய்வம்
2. ஆலயம் தொழுவது சாலவும் நன்று
3. இல்லறம் அல்லது நல்லறம் அன்று
4. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்
5. உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு
6. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்
7. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்
8. ஏவா மக்கள் மூவா மருந்து
9. ஐயம் புகினும் செய்வன செய்
10. ஒருவனைப் பற்றி ஓரகத்திரு
11. ஓதலின் நன்றே வேதியர்க்கு ஒழுக்கம்
12. கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை
13. தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை
14. தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை
15. புலையும் கொலையும் களவும் தவிர்
16. பொல்லாங்கு என்பபை எல்லாம் தவிர்

**கொன்றைவேந்தன் – ஔவையார்**

**ஆசாரக்கோவை**

(மதுரையில் கடைச்சங்ககாலப் புலவர் பெருவாயின் முள்ளியார் இயற்றியது.)

1. வைகரைற யாமம் துயிலெழுந்து தான்செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து - வாய்வதில்
தந்தையும் தாயும் தொழுதெழுக என்பதே
முந்மையோர் கண்ட முறை. (வெண்பா இல. 04)

2. **பொன் போலப் போற்றத்தக்கவை**

தன்னுடம்பு, தாரம், அடைக்கலம் தன் உயிர்க்கென்
றுன்னித் துவைத்த பொருளோடிவை நான்கும்
பொன்னினைப் போல் போற்றிக் காத்துய்க்க உய்காக்கால்
மன்னிய ஏதம் தரும். (வெண்பா இல. 95)

3. **இல்வாழ்க்கை சிறப்புறுவதற்கான காரணம்**

தந்தெறும்பு, தூக்கணம், புள், காக்கை என்றிவை போல்
தங்கருமம் நல்ல கடைப்பிடித்துத் தங்கருமம்
அப்பெற்றியாக முயல்பவர்க்காசாரம்
எப்பெற்றியானும் படும். (வெண்பா இல. 96)

❋ ❋ ❋

## திருமாங்கல்யம்

திருமாங்கல்யம் ஒன்பது இழைகளைக் கொண்டது. வாழ்வில் உள்ளதை உள்ளபடி புரிந்துகொள்ளுதல், மேன்மை, ஆற்றல், தூய்மை, தெய்வீகக் குணம், உத்தமமான குணங்கள், விவேகம், தன்னடக்கம், தொண்டு ஆகிய ஒன்பது குணங்களையும் ஒரு பெண் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கருத்தில் மாங்கல்யம் ஏற்பட்டுள்ளது.

## தாய்மையே பெண்ணின் சிறப்பு

அன்னை ஸ்ரீசாரதாதேவியாரின் தவவாழ்க்கையால் ஈர்க்கப்பட்டவர் மேலநாட்டு பெண்ணான சகோதரி நிவேதிதை. ஒரு சமயம் சகோதரி நிவேதிதையிடம் ஆணும் பெண்ணும் சமமா? என்று அன்னை கேட்டார். அப்போது நிவேதிதை ஆவேசத்துடன் ஆண், பெண் இருவரும் சமமாக இருக்கவே முடியாது எனக் கூறினார். பின்னர் அவரே அமைதியாக இருவரும் சமமாக இல்லை. பெண்கள் ஆண்களை விட ஒரு படி மேல். எந்தவிடயத்தில் என்றால் தாய்மை என்னும் குணங்களினால் என்று கூறினார்.



# நன்றியறிதல்

எண்ணற்ற பிறவிகளுள் அரிதான மானிடப்பிறவியை எமக்களித்து, நல்ல பெற்றோரையும், நற்கல்வியுடன் தெய்வ சிந்தனையையும், உய்யும் வழிகளையும், எமது அறிவைத் தெளிவிக்க நற்கல்வியாளரையும், அருளாளர்களையும் அறிமுகஞ் செய்து எம்மை இன்புடன் வாழ்விக்கும் இறைவனுக்கு எமது தலையாய நன்றிக்கடனை அர்ப்பணிப்போம்.

"தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை" அகழ்வாரைத் தாங்கும் பூமியிலும் பொறுமையானவள் தாய். நாம் குடியிருந்த கோயில். அவரவர் செய்த நற்தவப்பயனாக நல்லதாயின் கர்ப்பத்தில் தங்கி வாழ்ந்தோம். இக்காலத்தில் அன்னையவள் எமக்காக அனுபவித்த வேதனைகள் அவளுக்குத்தான் தெரியும். உரியகாலத்தில் எம்மை இவ்வுலகிற்கு அறிமுகஞ்செய்தாள். தொடர்ந்து பாலூட்டி, சீராட்டி, நோய்காத்து எம்மை முழு மனிதராக்கிய அன்னையை அன்புகலந்த நன்றியறிதலுடன் அரவணைப்போம்.

"தந்தை சொல்மிக்க மந்திரமில்லை" என்பது முதுமொழி. எமது அன்னையுடன் சேர்ந்து எம்மை முழுமனிதனாக்க அரும்பாடு பட்டுப் பேணி வளர்த்தவர் ஆகாயத்திலும் உயர்வான சிந்தனை உள்ள தந்தை. எம்மைச் சிறந்தவனாக இவ்வையகத்திலேயே முதன்மையானவராக்க வேண்டி அயராது ஆக்கமும் ஊக்கமும் நற்பண்பும் பகுத்தறிவும் புகுத்திப் பெருமையடையச் செய்தவர். இச்சீரிய பண்பாளரின் அகம் குளிரத்தகுந்த மதிப்புடன் போற்றிப் பூசனை செய்வோம்.

"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" அன்று குருகுலக் கல்வி மூலம் குருவினிடம் அவரது தவக்குடிலில் எதுவித வேறுபாடுமின்றி, குருவின் குற்றேவல் செய்து, அவ்விடத்தில் உணவு, உடை, உறையுள் பெற்றுவந்தனர். குருவிடம் சகல கல்வியும் நானாவித பயிற்சியும் பயின்று முழுமையான பயிற்சி பெற்றதும் குருதட்சணை வழங்கி குருவின் ஆசியுடன் இல்லம் ஏகினர். ஆனால்

நிலைகள் மாறியதால் இன்று மூன்று வயதில் முன்பள்ளிப் படிப்புடன் ஆரம்பித்து பல்கலைக்கழகப் படிப்பு வரை எத்தனையோ ஆசிரியர்களிடம் கல்வி பயில்கிறோம். மேலும் கல்வியுடன் சமயநெறி, தகவல்தொழில்நுட்ப ஊடாகங்கள் மூலம் புறக்கல்வியாம் உலகியல், பகுத்தறிவு, பட்டறிவு யாவும் தேடிக் கற்கிறோம். எமக்குச் சகலவற்றையும் போதிப்பவர் குருவாவார். இந்த நல்லாசான்களுக்கு நன்றிக்கடன் செலுத்த வேண்டும்.

நாம் எவ்வளவு நற்கல்வி, நற்பண்பு, நல்வித்தை யாவும் தேடிய போதும் எம்மை வழிநடத்தவும், ஆட்டுவிக்கவும், ஒரு அபூர்வ சக்தியாம் இறைவன் செயல் உண்டு. நாம் எண்ணியபடி யாவும் சிறப்புடன் அமைந்தாலும் இப்பிறவியில் அனுபவிப்பதுடன் மறுமையிலும் நல்வாழ்வு வேண்டும். அதற்காக இங்கு நல்ல அறச் செயல்களைச் செய்ய வேண்டும். இவ்வறச் செயல்களைச் சிறப்புடன் செய்வதற்கான சகல வசதிகளையும் தந்து உதவும் எல்லாம் வல்ல தெய்வசக்தியை நன்றியுடன் வேண்டிப் பணிவோமாக.

நிறைவாக எமது இல்லத்தில் நடைபெறும் மகிழ்வான வைபவங்களில் எம்மை நாடிவந்து நல்லாசியும், வாழ்த்தும் வழங்கும் அன்பு நெஞ்சங்களுக்கு உளம்கனிந்த நன்றிகள் பல.

❋ ❋ ❋

### அறப்பணி

நல்லதொரு குடும்பத்தை நாடி ஏதும் உதவிகோரி வருவோரை உபசரித்துத் தாகசாந்தி செய்து தம்மாலான உதவி புரிவது அறவழியாகும். ஒருவனின் வருமானத்தில் கால் பங்கு பெற்றோரைப் பேணும் கடனுக்கும், கால் பங்கு தனது குடும்ப அன்றாடச் செலவுக்கும், ஒரு கால் பங்கு தமது குடும்பத்தில் நலிவுற்ற விதவை, அநாதைகளுக்கான தருமத்துக்கும் மிகுதியான மறு கால் பங்கு தம்மை எதிர்காலத்தில் பராமரிக்கும் பிள்ளைகளிடம் சேமிப்புக் கடனாகவும் கொடுத்தல் அறப்பணியும் நிம்மதியுமாகும்.

Sunshine Graphics - K.K.S Road, Jaffna. Tel: 0777 592593